# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 071/மா/2018

ஆணை எண். 93/2018

நாள் : 09/04/2018

திருமதி சே. கனகா,
பாளையங்கோட்டை – 627 002. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி. – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, எண்.13/22, நெல்லை நயினார் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி சே. கனகா அவர்களின் 05.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.07.2017 அன்று பெறப்பட்டு, 071/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, எண்.13/22, நெல்லை நயினார் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி சே. கனகா என்பவர், பாளையங்கோட்டை வட்டம், வி.எம். சத்திரம், புல எண்.286/8–இல் உள்ள 0.40.0 ஹெக்டர் பரப்பளவுள்ள நிலம் தனக்குப் பாத்தியப்பட்டதென்றும், திருநெல்வேலி மாவட்ட கோட்டாட்சியர் ஆணையின்பேரில், பாளையங்கோட்டை துணை வட்டாட்சியர் அவர்களால் தன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதென்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். மேலும், திருநெல்வேலி மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அந்நிலத்தினை தனக்கு வழங்க ஆணையிடக் கோரி மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

2. திருநெல்வேலி மாநகராட்சி, மண்டலம்–2, உதவி ஆணையர் அவர்களிடம் 13.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும், 09.03.2018 நாளிட்ட தனது அறிக்கையில், இந்நேர்வு சம்பந்தப்பட்ட சொத்து மாநகராட்சிக்குச் சொந்தமான பூங்கா இடம் என்றும், மேற்குறிப்பிட்ட இடத்தில் KFW திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகப் பொழுது

போக்கு பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். எனினும், முறையீட்டு மனுதாரரான திருமதி கனகா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 20727/2013 எண்ணிட்ட நீதிப்பேராணையை தாக்கல் செய்துள்ளார் என்றும் அவ்வழக்கில் மேற்குறிப்பிட்ட நிலத்தினைப் பயன்படுத்த மாநகராட்சி தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், பூங்கா மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்படாமலேயே உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். விசாரணையின்போதும் மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்தார்.

3. இந்நேர்வு சம்பந்தப்பட்ட நிலம் குறித்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் உள்ளதை இம்முறைமன்ற நடுவம் உறுதி செய்தது. எனவே, நிலுவையில் உள்ள மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணையில் வழங்கப்படவுள்ள தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட பாளையங்கோட்டை மண்டல உதவி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், **9**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **மண்டல உதவி ஆணையர்,**
   **பாளையங்கோட்டை மண்டலம்,**
   **பாளையங்கோட்டை,**
   **திருநெல்வேலி மாநகராட்சி,**
   **திருநெல்வேலி.**

2. **திருமதி சே. கனகா,**
   **18/22, நெல்லை நயினார் தெரு,**
   **பாளையங்கோட்டை – 627 002.**

3. **மாநகராட்சி ஆணையர்,**
   **திருநெல்வேலி மாநகராட்சி,**
   **திருநெல்வேலி.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –**3,**
**இ.கோ. / உதிரிகள்**